**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன்**

**வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

தேதி: 15.09.2025

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | 6/2025 |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-9 |
| சாட்சியின் பெயர் | : | பாஸ்கர் |
| தந்தை பெயர் | : | பெரமாணியம் |
| கிராமம் | : | புதுக்குடி |
| தாலுக்கா | : | குடவாசல் |
| தொழில் | : | விவசாயம் |
| வயது | : | 57 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1,2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் பறையன் வகுப்பை சேர்ந்தவன் ஆவேன். அ.சா-1 ஆனந்த் எனது உறவினர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரிகள் தேவர் சமூகத்தை சேர்ந்தவர்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் பார்வை

மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. இந்த கையொப்பம் எங்கு வைத்து எதற்காக போடப்பட்டது என்றால் காவல் நிலையத்தில் வைத்து மேற்படி கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ-2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் நிலையத்தில் வைத்து நான் கையெழுத்து செய்துள்ள ஆவணத்தில் என்ன எழுதி இருந்தது என்றால் எதுவும் எழுதாத வெள்ளை பேப்பரில் தான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 30.09.2022 ஆம் தேதி 7.45 மணிக்கு நானும் எங்கள் தெருவை சேர்ந்த ராசு மகன் பாப்பையன் என்பவரும் புதுக்குடி கடைதெருவில் சுபாஷ் என்பவரின் சலூன் கடை வாசலில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது அப்போது நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அ.சா-1 ஆனந்திற்கும் எதிரிகளுக்கும் நடந்த சண்டை தொடர்பாக சம்பவ இடத்திற்கு வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் தயார் செய்தார் என்றும், தயார் செய்த பார்வை மகஜரில் நானும் என்னுடன் வந்த ராசு மகன் பாப்பையன் என்பரும் கையெழுத்து போட்டோம் என்றும், பின்னர் மாதிரி வரைபடம் தயார் செய்தார். இது தொடர்பாக நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் விசாரணையில் சம்பவம் தொடர்பாக கூறிவிட்டு எதிரிகள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் என்பதால் எதிரிகளை

காப்பாற்றும் நோக்கோடு உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.15 15:29:10 +0530

அமர்வு நீதிபதி,

எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு

நீதிமன்றம், திருவாரூர்.